Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ௵ ஜூன் ௴ 19௳, வெள்ளிக்கிழமை [இதழ் 24

## எல்லோரையும் பாதிக்கும் யுத்தம்.

### ரஷ்ய குரங்குப் படைகளின் சாமர்த்தியம்,

### ஜெர்மானியர் படும் நரக வேதனை!

டில்லி, அகில இந்திய ரேடியோ மூலம் மிஸ்டர் பிலிப் யோர்தான் பேசியதன் சாரமாவது :—

தற்கால யுத்தம், போராடுவதே தம் தொழிலாகக் கொண்டவர்கள் மட்டும் நடத்துவதல்ல. மக்கள் அனைவருக்கும் இதில் பங்கு இருக்கிறது. எந்தெந்த நாடுகள் பாதிக்கப்படுகின்றனவோ, அந்த நாட்டவர்கள் அனைவரும் அதில் அக்கரை கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த உண்மையை படைகளிலேயே பண்பட்டவர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்றாலும், நேச தேசப் படைத் தலைவர்களில் ஒருவராவது இந்த உண்மையை உணர்ந்திருக்கிறார். இந்தக் கருத்தைச் செயலிலேயும் செய்து வெற்றிகரமாக முடித்து விட்டார். இவர் இப்படிச் செய்யாதிருந்தால், இந்தக் கருத்தே பிரயோசனமில்லாதது என்று முடிவு கட்டியிருப்பார்கள். இவர் தான் ருஷ்யப் படைத் தலைவர். இந்த யுத்தம் உங்களையும் என்னையும் அனைவரையும பாதிக்கக் கூடியது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். பதுங்கிப் பாயும் குரங்குப் படையினரைத் திரட்டினார். அவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கி, தகுந்தபடி பயிற்சி கொடுத்தார். இவர்களைத் தான் ரஷ்யாவில் 'பங்காளிகள்' என்று கூறுகிறார்கள்.

யுத்தப் போக்கில் எந்த விதமான முடிவான பயனையும் இவர்களால் காண முடியவில்லை என்றாலும், எதிரிகளான ஜெர்மானியர்கள் தம் நாட்டை வெல்ல ஒட்டாதபடி தடுக்க இவர்கள் வீரம் பெரிதும் உதவுகிறது.

ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் யுத்தம் மூண்டது முதல், 7 மாத காலம், நான் சோவியத் நாடுகளில் இருந்தேன். ரஷ்ய யுத்த முயற்சிகள் எவ்வளவு மகத்தான முறையில் நடைபெறுகின்றன என்பதைக் காண எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள், வேறு எந்த நேச தேசத்தவர்களுக்கும் கிடைத்ததில்லை.

**முன் ஏற்பாடுகள்.**

ஜெர்மானியர்கள் தம்மைத் தாக்குவார்களானால், தாம் அவர்களை எதிர்த்து அடிக்கும் முன்பு, கட்டாயம் கொஞ்சம் பூமியை இழக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று, யுத்தம் ஆரம்பமாகு முன்பே ரஷ்யப் படைத் தலைவர் உணர்ந்தார்.

அப்போது அவர் என்ன செய்தார் தெரியுமா? கிராமங்களுக்கும் பண்ணைகளுக்கும் போனார் அங்கெல்லாம் பதுங்கிப் பாயும் குரங்குப் படைகளை அமைத்தார். இந்தப் படைகளுக்குத் தலைவராகக் கிராமத் தலைவரையாவது, அந்த ஊரிலுள்ள அரசியல் கட்சித் தலைவரையாவது நியமித்தார். இந்தப் படையினர் உணவுப் பொருள்களையும் யுத்தத் தளவாடங்களையும் காட்டிற்குள்ளே பத்திரமான இடங்களில் புதைத்து வைத்தார்கள். "எதிரிகள் வந்தால், அவர்களுக்கு எவ்வளவு தூரம் கஷ்டங் கொடுக்க வேண்டுமோ, அவ்வளவு கஷ்டம் கொடுப்பதுடன், அவ்வப்போது எனக்கு அறிவிக்கவேண்டும்" என்றும் ரஷ்யப் படைத் தலைவர் அப்படையினருக்கு அறிவித்தார்.

**நரக லோக வாழ்வு.**

ஜெர்மரனியர்கள் ரஷ்யாவிற்கு வந்தார்கள். குரங்குப் படையினர், காட்டிற்குள்ளும் மலைகளிலும் பதுங்கிக் கொண்டார்கள். நரக லோக வாழ்விற்கு ஜெர்மனியர்களை ஆளாக்கினார்கள். இவர்களால் ஜெர்மனியரோடு நேர்முகமாக இருந்து போராட முடியவில்லை. தாம் பதுங்கியிருக்குமிடங்களிலிருந்து இரவுகளில் திடீரென்று வெளி வந்து ஜெர்மன டாங்கிகள் சேர்த்து வைத்திருக்குமிடங்களையும், இராணுவத் தலைமைக் காரியாலயங்களையும், ஜெர்மன் போக்குவரவு சாதனங்களையும் நாசம் செய்து விட்டார்கள். ஜெர்மன் படைகளுக்கு சப்ளைகள் கொண்டு வரும் ரயில் வண்டிகளைத் தண்டவாளத்தை விட்டு நழுவி, மேலே செல்ல ஒட்டாதபடி பல முறை செய்து விட்டார்கள்.

இரவில் மட்டுந் தான் இவர்கள் வேலை செய்கிறார்கள் என்பதல்ல. பகலிலும் பதுங்கியிருந்து போராடுகிறார்கள். இவர்களிடம் எப்போதும் துப்பாக்கியிருப்பதில்லை. துப்பாக்கி இல்லாத சமயங்களில் அரிவாள்களைக் கொண்டும், கத்திகளைக் கொண்டும் தம்மால் இயன்ற வரை எதிரிகளைக் கொன்று விடுகிறார்கள். பெரிய தெருக்களில் மட்டுந் தான் தம் சாமான்களை ஜெர்மானியர்கள் கொண்டு போகலாம் என்னும் அளவிற்கு, இந்தக் குரங்குப் படையினர் பாத்தி விடுகிறார்கள். ரஷ்ய விமானப் படைகள் எதிரி சப்ளைகளைத் தாக்குவதற்கு இது மிகவும் உதவியாயிருக்கிறது. ரஷ்யர்களுக்கு வரும் சப்ளைகளை ஜெர்மானியர்

**ரஷ்யத் திருநாள்**
**22—6—1942**
**திங்கட்கிழமை**

தாக்கி நாசப்படுத்துவதை விட, மிகவும் பல மடங்கு அதிகமாக ஜெர்மானியர்களின் சப்ளைகளை ரஷ்யர்கள் நாசப் படுத்துகிறார்கள். இதுமட்டுமா? ஜெர்மன் போக்குவரவு சாதனங்களைக் காக்க ஜெர்மானியர்கள் சாதாரணமாக நியமிக்கும் காவல்காரர்களை விட, வெகு அதிகமான காவல்காரர்களை நியமிக்க வேண்டிய அவசியத்தை ரஷ்யர்கள் உண்டாக்கி விடுகிறார்கள்.

எந்த நேரத்தில் நம் முதுகில் கத்தி பாயுமோ என்று உள்ள உலகத்தில், வாழ்க்கை எப்படி அமைதியாயிருக்க முடியும்? ரஷ்யாவிற்குப் போயுள்ள ஜெர்மன் படைவீரர்கள் வாழும் உலகம் இப்படிப்பட்டது தான். ரஷ்யாவில் தாம் கைப்பற்றியுள்ள நாடுகளில் உள்ள ஜெர்மன் படை வீரர்கள் அங்கே இரவில் படுக்கப் போகும் போது, மறு நாள் காலையில் தாம் உயிருடன் விழிப்போம் என்னும் நம்பிக்கையோடு இருக்க முடியாது. நாட்டுப் பற்று மிகுதியுங் கொண்ட ரஷ்ய ஆண்களும், பெண்களும், பையன்களும், சிறுமிகளும் கூட, இரவுகளில் தாம் பதுங்கியிருக்கும் இடங்களிலிருந்து திடீரென்று வெளிப்பட்டு ஜெர்மன் வீரர்கள் படுத்துத் தூங்கும் இடங்களை வெடி வைத்துப் பொசுக்கி விடுகிறார்கள். இதற்குத் தப்பி ஜெர்மானியர்கள் ஓடுவார்களானால், அவர்களைக் கத்தியால் குத்திக் கொல்லுவார்கள், அல்லது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுவார்கள்.

**முதல் பாடம்.**

தாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டு தான் கரங்குப் படையினர் போராட வேண்டும் என்பது அவர்களுடைய முதல் பாடம். பயிற்சி பெற்ற மற்ற போர் வீரர்களைப் போல இவர்கள் சுற்றி ஓடி ஆடிப் போராடுவதில்லை. இருந்த இடத்திலிருந்தே போராடுவதனால் தான் அவர்கள் மிகவும் பலசாலிகளாக இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் குடியானவர்கள். அதே இடத்தில் நெடுநாட்களாக வசித்து வருகிறவர்கள். அந்தப் பகுதியிலுள்ள ஒவ்வொரு துணுக்கு இடமும் அவர்களுக்குத் தெரியும். அந்தந்த எல்லையிலுள்ள ஒவ்வொரு மரமும், புல்லுங் கூட அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஜெர்மன் படையினருக்கோ புதிய இடம். ஒன்றும் தெரியாது. எனவே, இந்தக் குரங்குப் படையினரைப் பிடிக்க ஜெர்மன் படையினரால் முடிவதில்லை.

தம் படையை விட்டு வழி தவறிப் போன அநேக ரஷ்ய வீரர்களை மீண்டும் தம் படையுடன் சேர்க்க இந்தக் குரங்குப் படையினர் பல முறை அவர்களுக்கு உதவியிருக்கின்றனர். சில சமயங்களில் அவரைத் தம் படைத் தலைவராகத் தம்மோடேயே வைத்துக் கொள்ளுவதுமுண்டு.

எதிரிகள் மனத்தில் பெரும் பீதியை உண்டாக்குவது தான் ரஷ்யக் குரங்குப் படையினரின் முக்கியமான வேலை. இவர்கள் ஜெர்மன் படைகளுக்கு ஓயாத தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தம் மீது எந்த நிமிஷம் திடீரென்று பாய்ந்து தம்மை யழித்து விடுவார்களென்று, ஜெர்மானியர்களுக்குத் தெரியாது. இவர்கள் நாட்டுப் பற்று மிகக் கடுமையானது. எல்லாவற்றிலும் தம் நாட்டு விடுதலையே தலைமை யானது என்று கருதுகிறவர்கள். இவர்கள் போராட்டம் படித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், இதற்காகவே போராடுகிறவர்கள்.

---

# பிரிட்டிஷ்---ரஷ்யக் கூட்டுறவின் சின்னம்.

## இராணுவ வேலைகளே மிகவும் முக்கியம்.

### மர்மான்ஸ்க் மாஸ்கோ ரயில்வே பிரயாணம்.

மிஸ்டர் நெக்லி பார்சன் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

ரஷ்யர்களுக்கு நன்றி செலுத்துங்கள். நேசதேசத்தார் எந்த அளவிற்குக் கொடுக்கக் கூடுமோ, அந்த அளவிற்கு, பீரங்கிகளையும் விமானங்களையும் ரஷ்யாவிற்குக் கொடுத்து உதவுங்கள். தம்மால் இயன்ற வளவுக்கும் மிகவும் புத்திசாலித் தனமாகவும் செம்படையினர் அவற்றை பயன் படுத்துவார்கள். சோவியத் நாடுகளில் சில மாதங்கள் நான் இருந்து நேரில் கண்டவற்றைக் கொண்டு, நான் வந்த முடிவு இது தான். இந்த யுத்தத்தைக் கடைசி வரை போராடியே தீருவது என்னும் உறுதி யோடு அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நாம் எதை அனுப்பினாலும், அதை அவர்கள் வீணாக்க மாட்டார்கள்.

நான் மாஸ்கோவிலிருந்து திரும்பி வரும் போது, பத்து நாட்களுக்குப் பிறகு தான் மர்மான்ஸ்க் வந்து சேர்ந்தேன். நான் ஏறி வந்த ரயில் வண்டி இரண்டொரு நாட்களில், ஒரு நாளைக்கு 50 மைல் விகிதம் கூடப் போக வில்லை. எங்கள் வண்டி பெரும்பாலும் ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள பக்கத்து லைனில் தான் நின்று கொண்டிருந்தது. நான், உதவிக் கப்பல் ஒன்றில் ஏறி வர வேண்டியவன் ஆகையால், இந்தத் தாமதத்தால் நான் கடுங் கோபம் கொண்டேன். இதில் ஏறிப் போகிறவர்கள் காலா காலத்தில் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமே என்பது பற்றி ஒருவராவது கவலை கொண்டதாகத் தெரியவில்லை. எங்கள் வண்டி ஸ்டேஷனிலுள்ள பக்கத்து லைனில் நிற்கும் போதெல்லாம் அடுத்தடுத்து பல வண்டிகள் யுத்தத் தளவாடங்களை ஏற்றிக் கொண்டு எதிர்ப் புறமிருந்து வந்து கொண்டிருந்தன. வட சமுத்திரத்தின் வழியாக அப்பொழுது தான் வந்திறங்கிய யுத்தத் தளவாடங்களைத் தான், அந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போனார்கள். விமானங்களும், டாங்கிகளும், புதுப் பெட்டிகளும் அவற்றில் ஏராளமாக ஏற்றப் பட்டிருந்தன.

மாஸ்கோவிற்கும் மர்மான்ஸ்க்குக்கும் இடையே சம தூரத்தில் ஒரு ஜங்ஷன் இருக்கிறது. இங்கே இரண்டு நாட்கள் நான் தங்கும்படி நேர்ந்தது. மிகவும் தாமதம் ஏற்பட்டதனால், எனக்குப் பதைபதைப்பு மிகவும் அதிகமா யிருந்தது. ஏராளமான ரஷ்யர்கள் ஒவ்வொரு வண்டியிலிருந்தும் சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவற்றை இறக்குவதற்கு எந்த வகை இயந்திரத்தையும் உபயோகிக்க வில்லை ; தம் கை வலிமையைக் கொண்டு தான் இறக்கினார்கள். தண்டவாளங்களில் இருக்கும் வண்டிகளையுங் கூட, அவர்கள் தம் கைகளால் தள்ளிக் கொண்டு போய்த் தான் இணைத்தார்கள். இது கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது. பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும் ரஷ்யாவிற்கு அனுப்பும் சப்ளைகள் எல்லாவற்றையும் பெரிதும் பாராட்டி ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

**சிறுமிகள் வீரம்.**

மர்மான்ஸ்க் துறைமுகம் மிகவும் ஜன நெருக்கமான இடம். இங்குள்ள கிடங்குகளின் மேல் சிறுமிகள் காவல் புரிந்து வந்தனர். அப்போது, அந்தப் பகுதி தாக்கப் பட்ட போதிலும், அச்சிறுமிகள் தம் இடம் விட்டுப் பெயரவே இல்லை. யுத்தத தளவாடங்கள் ரஷ்யாவில் இறக்குமதி யாவதற்கும் அவற்றை உபயோகிப்பதற்கும் ஏற்படும் எந்த வகைத் தடையையும் ரஷ்யர்கள் சகித்திருக்க மாட்டார்கள்.

நான் ரஷ்யாவிற்குப் போன போது ஒரு துணைக் கப்பலில் தான் ஏறிப் போனேன். அந்தக் கப்பல்களில் டாங்கிகளும், விமானங்களும் ஏராளமாக

ஏற்றி யிருந்தார்கள். நாங்கள் வந்து கரை சேர்ந்த வுடன் அங்கு நடை பெற்றவற்றை கவனித்தோம். தாழ்ப் பூட்டுகளைக் கழற்றும் வரையிலும் கூட, ரஷ்யர்கள் காத்திருக்க வில்லை. நாம் இந்த ஆபத்தான பிரயாணத்தை மேற் கொண்டது மிகவும் நியாயம் தான் என்று எங்கள் கப்பலில் இருந்த ஒரு தொழிலாளி கூறினர். இங்கே வந்து இறங்குவது வன போஜனத்திற்கான பொருள்கள் அல்ல. இந்த வார்த்தையை மறுக்க உண்மை யறிந்த எவரும் முன் வர மாட்டார்கள். இவ்வளவு ஆபத்தானதோர் பிரயாணத்தை இந்தத் தொழிலாளி மேற் கொண்ட போதிலும், மீண்டும் ஒரு முறை ரஷ்யாவிற்கு வர வேண்டு மென்று தான் கூறுவார். பிரிட்டிஷ் கப்பல் தொழிலாளியின் இந்தப் போக்கு மிகவும் சிறந்தது. இது தான் பிரிட்டிஷ்-ரஷ்யக் கூட்டுறவின் சின்னம்.

---

# புதிய ஆங்கிலோ-ரஷ்ய ஒப்பந்தம்.

## முழு விவரங்கள்:

### யுத்தத்திற்குப் பிறகும் ஒற்றுமை.

ஹிட்லர் ஆட்சிக் குட்பட்ட ஜெர்மனி யோடும் அதைச் சேர்ந்த ஐரோப்பியக் கூட்டாளிக ளோடும் போராட வேண்டி, சோவியத் சமதர்ம குடியரசு நாடுகளும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், வட அயர்லாந்தும் கூட்டுறவோடி ருக்கவும், பரஸ்பர உதவி புரிந்து கொள்ளவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முழு வாசகம் வருமாறு :—

1. ஐரோப்பாவைக் கொடுமைப் படுத்தும் ஜெர்மனி யோடும் அதன் கூட்டாளிக ளோடும் போராட வேண்டி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யங்களும், சோவியத் ஜனநாயகக் குடியரசுகளும் கொண்டுள்ள நேச பான்மைக்கு ஏற்ப, இராணுவத் துறைகளிலும் மற்றும் எல்லாத் துறைகளிலும் பரஸ்பரம் உதவி செய்து எல்லா வகைகளிலும் ஆதரித்துக் கொள்ள வேண்டும்.

2. ஹிட்லர் சர்க்காரோடாவது, பிறரை கொடுமைக் குள்ளாக்க வேண்டும் எனனும் எண்ணத்தை அடி யோடு விட்டு விடாத எந்த ஜெர்மன் சர்க்காரோடாவது, இந்த ஒப்பந்தத்தில் கட்டுப் பட்டுள்ள எந்தக் கட்சியாரும் எந்த விதமான சமரச முயற்சியும் நடத்தக் கூடாது ; எந்தவித முடிவிற்கும் வரக்கூடாது. ஆனல் இருதரப்த்தாரும் பரஸ்பரம் இசைந்தால் மட்டுந் தான், ஜெர்மனியோடாவது, கொடுமைப் படுத்துவதில் அதைச் சார்ந்துள்ள மற்ற நாடுகளோடாவது, சமரசம் செய்து கொள்ளலாம்.

3 (i) யுத்தம் முடிந்த பிறகு, சமாதானத்தை நிலை நாட்டவும் கொடுமைகளைத் தடுக்கவும், பொதுவாக என்ன செய்ய வேண்டும் என்று இந்த இரு சர்க்கார்களைப் போலவே கருதும் மற்ற சர்க்கார்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு அந்த சர்க்கார்களோடு ஒற்றுமை கொள்ள விரும்புகிறது. (ii) இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளுவது ஒருபுறம் இருக்க, யுத்தம் முடிந்த பிறகு, இப்போது நடந்து வரும் கொடுமைகள் மீண்டும் நடை பெறுதிருக்கும் படித் தடுக்கவும், ஜெர்மனிய வது அல்லது ஐரோப்பாவைக் கொடுமைக் குள்ளாக்கும் மற்ற சர்க்கார்களாவது சமாதான பங்கம் உண்டு பண்ணு திருக்கும் படி தடுக்கவும், எல்லா முறைகளையும் கையாள வேண்டும்.

4. யுத்தம் முடிந்த பிறகு, இந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டும் கட்சிகளில் ஏதாவ தொன்றோடு, ஜெர்மனியாவது, 3 (i)-வது விதியில் குறிப்பிட்டுள்ள எந்த சர்க்காராவது விரோதங் கொண்டு அந்தக் கட்சியாரைத் தாக்கும்படி நேர்ந்தால், விரோதத்திற்கு உள்ளான அந்தக் கட்சிக்கு, மற்ற கட்சி, தம்மால் ஆன வரை இராணுவ உதவியும் மற்ற உதவிகளும் வழங்க வேண்டும். 3 (i)-வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை ஏற்றுகொள்ளுவதன் மூலம் இந்த விதி அமுலில் இல்லை என்று இரு கட்சியாரும் ஒப்புக் கொள்ளும் வரை, இந்த விதி அமுலில் இருக்கும். அந்த ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளத் தவறினல் இந்த விதி இருபது வருஷங்கள் வரையிலும், அதற்குப் பிறகும் 8-வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி இந்த ஒப்பந்தக் காரர்களுள் ஒருவர் இந்த விதியை ரத்து செய்ய வேண்டு மென்று விரும்புகிற வரையிலும் அமுலில் இருக்கும்.

5. சமாதானம் ஏற்பட்ட பிறகு, ஐரோப்பாவின் பொருளாதார முன்னேற்றத் துறைகளைப் பலப்படுத்தி அமைக்கவும் தம் ஒவ்வொருவருடைய பாதுகாப்பை முன்னிட்டும் நெருங்கிய நேசமான முறைகளில் ஒத்துழைக்க வேண்டும். இதில் நேச தேசத்தாரின் நன்மைகளையும் கவனிப்பார்கள். பிறர் நாடுகளைத் தம்மோடு சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவும் மாட்டார்கள்.

6. யுத்தத்திற்குப் பிறகு இந்த ஒப்பந்தக் கட்சியார்கள் ஒருவருக் கொருவர் பொருளாதார உதவியும் செய்து கொள்ளுவார்கள்.

7. இந்த ஒப்பந்தக் கட்சிகள், தம்மில் ஒரு கட்சியாருக்கு விரோதமாக ஏற்படும் எந்த விதமான ஒப்பந்தத்திலாவது, கூட்டமைப்புகளிலாவது கலந்து கொள்ள மாட்டாது.

8. இந்த ஒப்பந்தம் கூடிய சீக்கிரம் ஊர்ஜிதம் செய்யப்படும். இந்த ஒப்பந்தப் பத்திரங்களில் கூடிய சீக்கிரம் மாஸ்கோவில் கையெழுத்திட்டு, அதை சம்பந்தப்பட்ட கட்சியார்கள் மாற்றிக் கொள்ளுவார்கள். இப்படி மாற்றிக் கொள்ளப் பட்ட வுடனேயே இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும். 1941-ம் ஆண்டு ஜுலை மீ 12௳ சோவியத் சர்க்காருக்கும் பிரிட்டிஷ் சம்ராஜ்ய மன்னர் பிரான் சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை இந்த ஒப்பந்தம் ரத்து செய்து விடுகிறது.

1-ம் பாகம்.—இந்த ஒப்பந்தக் கட்சியார்களுக்கும், ஜெர்மனிக்கும், ஐரோப்பாவில் கொடுமைகள் செய்யும் அதன் கூட்டாளிகளுக்கும் மீண்டும் சமாதானம் ஏற்படும் வரையிலும், இந்த ஒப்பந்த (1, 2 விதிகள்) அமுலில் இருக்கும்.

2-வது பாகம்.—இந்த ஒப்பந்த (3 முதல் 7 விதிகள்) 20 வருஷ காலம் அமுலில் இருக்கும். 20 வருஷங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ரத்தாக வேண்டும் என்று, அதற்கு 12 மாதங்களுக்கு முன் பாகவே ஒரு கட்சியார் மற்றக் கட்சியாருக்கு அறிவித்திருந்தா லல்லது, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து அமுலில் இருக்கும். என்றாலும் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விடவேண்டு மென்று எழுத்து மூலமாக நோட்டீஸ் கொடுத்த 12 மாதங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ரத்தாகும்.

இந்த ஒப்பந்தத்தை இங்கிலீஷிலும், ரஷியன் மொழியிலும் எழுதி, 1942-ம் ஆண்டு மேமீ 26௳ லண்டனில் மிஸ்டர் ஈடனும், தோழர் மலோடோவும் முறைப்படி கையெழுத் திட்டார்கள்.

# ஜெர்மானியனுக்கு, ரஷ்யன் எஜமான்

## ரஷ்ய வீரனின் பெருமிதம்.

### 5-வருஷத் திட்டங்களின் பலன்.

எப்போதும் ஜெர்மானியனுக்கு ரஷியன் எஜமான். இதை நெப்போலியன் கூட எழுதி வைத்திருக்கிறார். சென்ற யுத்தத்தில் வென்றது போலவே, இந்த வருஷத்திலும் கூட சனியனைக் கொண்டு தாக்கிய போதெல்லாம ரஷ்யர்களே வெற்றி பெற்றார்கள். பிரபுக்களின் பூஸ்திதிகளையோ முதலாளிகளின் சொத்துக்களையோ செஞ் சேனைகள் இன்று காவல் புரிய வில்லை. ஆனால், தம் நாட்டவர்கள் அனைவருக்கும் உரிமை யுள்ள தேசியச் சொத்துக்களைத் தான் காவல் புரிகின்றன. பெரிய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் படை வீரர்களுக்கு மிருந்த வேற்றுமைகள் அடிமாண்டு போயின. ஒவ்வொரு ரஷ்ய வீரனும் ஒரு பிரதம தளகர்த்தனுக் குரிய பெருமிதத்தோடு போர்க் களத்திற்குப் போகிறான்.

சேனையின் பின் அணிகளில், 1812-ம் வருஷம் இருந்த போர் உணர்ச்சி, இன்று அவர்களுக்குள் காணப்படுகிறது. தோழர் ஸ்டாலின் வகுத்த 5 வருஷ உற்பத்தி திட்டங்களால், எந்த விதமான நிலைமையையும் சமாளிக்கக் கூடிய பலம், ரஷ்யர்களுக்கு ஏற்பட்டு விட்டது. அன்றியும் எல்லா வகைத் தொழிலாளர்களும் தாம் சாதாரணமாகத் தயார் செய்வதைப் போல் இரண்டு பங்கு பொருள்கள் தயார் செய்கிறார்கள்.

—பெர்னார்ட் பேர்.

---

# போர்க்களங்களுக்கு நாடகக் கோஷ்டி

## சிறந்த வேலைகள் செய்கின்றன

நம் நாட்டி லிருந்து இரண்டு நாடகக் கோஷ்டியார் மத்தியக் கிழக்குப் போர் அரங்கத்திற்குப் போய் நம் படையினர் முன் ஆடி சந்தோஷிக்கச் செய்கிறார்கள். இவற்றில் ஒன்று நடனக் கோஷ்டி. இந்தக் கோஷ்டியில் புகழ் வாய்ந்த இந்திய சினிமா நடிகரும் போய் இருக்கின்றார். மற்றொரு கோஷ்டி பல திரப்பட்டவர்களைக் கொண்டது. இதில் ஒரு 'மந்திரவாதியும்' போய் இருக்கிறார்.

நிற்க, பஞ்சாப் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு கோஷ்டிகளைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன. இந்தக் கோஷ்டிகள் கூடிய சீக்கிரம் இந்தியாவை விட்டுக் கப்பல் ஏறும். மற்ற மாகாணங்களிலும் கிராமக் கோஷ்டிகள் தயார் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. இது வரை சென்றுள்ள கோஷ்டிகள் மிகவும் சிறந்த முறையில் அதிகக் கஷ்டப்பட்டுத் தம் கடமைகளை நிறை வேற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றை நம் படைகள் மிகவும் பாராட்டுகின்றன ; என்றாலும், தேவைகளுக்கு ஏற்ற அளவிற்கு இந்த கோஷ்டிகள் இல்லை. எனவே, இன்னும் பல கோஷ்டிகளைச் சேகரிக்க வேண்டும்.

களியாட்டக்காரர்கள், பாடகர்கள், நடிகர்கள், வேடிக்கை காட்டுவோர்கள் ஆகியோர் ஏராளமாகத் தேவை. வெளி நாடுகளிலுள்ள நம் படையினரோடு போக விருப்ப முள்ளவர்கள், சிம்லா, ஜெனரல் ஹெட் குவார்டர்ஸ், ஏ.சி.இ.எஸ். டைரக்டொரேட்டுக்கு எழுதிக் கொள்ளலாம்.

இந்தியப் படைகளுக்கு மற்றொரு அவசரத் தேவையு முண்டு. வைத்திய சாலைகளிலும், இளைப்பாறும் விடுதிகளிலும் சுவர்களில் ஒட்டத் தகுந்த கண் கவரும் வர்ணப் படங்களும் தேவை. ஏற்கெனவே ரயில்வே போர்டார் நூற்றுக் கணக்கில் கொடுத்து உதவி யிருக் கிறார்கள் ; இவை போதாது. இந்தியாவிலுள்ள அநேக பெரிய கம்பெனிகள் அழகிய கண் கவரும் வர்ணப் படங்களையும் விளம்பரங்களையும் கொடுத்து உதவலாம்.

---

# சோவியத் தலைவருக்கு நம் மன்னர் கடிதம்

## 'உலக நன்மைக்கு வழி'

ஆங்கிலோ—ரஷ்ய இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட போது இங்கிலாந்து மன்னர் பிரானும் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசுகளின் சுப்ரீம் கௌன்சில் தலைவரான தோழர் எம். கலினினும் பரிமாறிக் கொண்ட செய்திகளாவன :—

**மன்னர் அனுப்பிய செய்தி :—**

இன்று, நமக்குள் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்தானது பற்றி, தலைவரே! என் நன்றியை இச்சமயத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் நாடுகள் தொடுத்துள்ள கடுமையான போராட்டத்திற்கு இந்த ஒப்பந்தம் புதிய பலத்தைத் தருகிறது. நாம் அடையப் போகும் வெற்றிக்குப் பிறகு அநேக வருஷங்கள் வரையில், முழு மனதோடு கூட்டுறவாடி பரஸ்பரம் உதவி புரிய வேண்டும் என்று இரு தரத்தாரையும் கட்டுப் படுத்துகிறது. இந்த ஒப்பந்தத்தின் பலனாக நம் இரு நாடுகள் மட்டு மன்றி, மற்றும் உலக மெல்லாம் நன்மை யடையு மென்று நான் கருதுவது போலவே, தாங்களும் கருதுவீர்க ளென்று நான் நம்புகிறேன்.

**தோழர் எம். கலினின் மன்னருக்கு அனுப்பிய செய்தி :—**

நம் இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது பற்றி தாங்கள் அடைந் துள்ளது போலவே நானும் மகிழ்ச்சி யடைகிறேன். நம் பொது எதிரியோடு, கொஞ்சங் கூட விட்டுக் கொடுக்காமல் போராடுவதில் நம் இரு நாடுகளும் கொண்டுள்ள இராணுவ நேசம் இந்த ஒப்பந்தம் கை யெழுத் தானதனால் மேலும் பலப் பட்டிருக்கிறது என்று நான் பெரிதும் நம்புகிறேன். வெற்றிக்குப் பிறகு பல வருஷங்கள் வரை, மனமுவந்து கூட்டுறவும் பரஸ்பர உதவியும் கட்டாயம் ஏற்படும் என்றும் நம்புகிறேன். தங்கள் வரவேற்பது போலவே நானும் இந்த ஒப்பந்தத்தை மனதார வர வேற்கிறேன். நம் இரு நாடுகளுக்கு மட்டு மன்றி உலகம் முழுதுக்குமே இதனால் நன்மை யுண்டு என்றும் நான் நம்புகிறேன்.

# கன வேகமாகப் போகிறதே வண்டி !



சலவைத் தொழில் செய்து கொண்டிருந்த பெண், பெரிய இராணுவ மோட்டார் லாரியை ஓட்டக் கற்றுக் கொள்ளுகிறுர்.

## இரங்குகிறேம்.

சென்ற வாரம் வெளி வந்த இதழில் இந்தியன் இனசினீரிங் இலாகாவைச் சர்ந்த 63559-ம் நம்பர் சாப்பர் பரசுராமன் காணப்படவில்லை என்று அறிவித்திருந்தோம். அவர் இறந்து போனுர் என்ற செய்தி இப்போது எமக்குக் கிடைத்திருக்கிறது. அவருடைய கும்பத்தாருக்கு எமது அனுதாபம் உரித்தாகுக !

யுத்தத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டங்களைக் குறித்து கீழ்க்கண்ட தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன :—

### காணுமற் போனவர்கள்.

இந்திய வைத்தியப படை :—

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 181529 | நாவிதன் .. | லட்சுமணன். |
| எச். 192253 | ஏ சமையல்காரர். | அம்பிகா. |
| ,, 193417 | என். சமையல்கார் | அப்பாத்துரை. |
| ,, 19274 | எஸ். கே. சிப்பாய். | எஸ். என். சக்கரவர்த்தி. |
| ,, 189018 | டபுள்யு. செர் வென்ட். | தேவசகாயம். |
| எச். 194316 | எம். சமையல் காரர். | சந்தனசாமி. |
| ,, 167122 | சமையல்காரர் .. | தம்புசாமி. |

### காயப்பட்டவர்கள்.

| | | |
|---|---|---|
| 188812 | தையல்காரர் .. | கே. நாகையா. |

ஐ.ஏ.ஓ.சி :—

| | | |
|---|---|---|
| ஓ. 121964 | லான்ஸ் நாயிக் .. | சி. ஏ. பத்மநாபன். |

ஆர்.ஏ.ஏ.எஸ்.சி :—

| | | |
|---|---|---|
| ஓ. 71221 | சிப்பாய் .. .. | என். மாமுண்டிசாமி. |

சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் :—

| | | |
|---|---|---|
| 35720 | சாப்பர் .. .. | கிருஷ்ணசாமி நாயுடு. |
| 60170 | ஷை .. .. | மாட செட்டி. |

இந்திய இஞ்சினீரிங் இலாகா :—

| | | |
|---|---|---|
| 63633 | சாப்பர் .. .. | கோவிந்தசாமி. |
| 63066 | ஷை .. .. | கெ. குன்னிராமன் நாயர். |
| 62800 | ஷை .. .. | ராஜு. |
| 63153 | ஷை .. .. | இராமச்சந்திர ரெட்டி. |

---

## வேற்றுமையில் ஒற்றுமை முளைக்கிறது !
### போர்க் கடவுளால் இணைக்கப்பட்டவர்கள்

யுத்த காலத்தில் ஆங்கிலோ ரஷ்யக் கூட்டுறவு எப்படி அமைந் திருக்கிறதோ, அது போலவே சமாதான காலத்திலும் ஆங்கிலோ—ரஷ்யக் கூட்டுறவு அமைய வேண்டும். ரஷ்யர்கள், தனிப் பட்ட முறையில் சட்டத்திற்கு விரோதமாகப் போராடிய வர்கள், மத உரிமைகளை எதிர்த்தவர்கள். இவற்றிற்காகத் தனிப்பட்ட முறையில் நாம் போராடினேம். கூட்டுப் பொருளாதார முறை கூடாது என்று நம் நாடு முழுதும் போராடுகிறது. பொது மக்களுக்கு ஏற்றபடி தான் மதம் அமைய வேண்டும் என்பதையும் நாம் கடுமையாக எதிர்க்கிறேம். என்றுலும், நாம் ஒரு பொது விஷயத்தில் தோழர்களாக இருக்கிறேம். தாங்க முடியாதவை என்று நாம் எதிர்த்த கொள்கைகளிலும், ஏதேனும் நன்மை இருக்கக் கூடும் என்று கருதத் தலைப்பட்டிருக்கிறேம். "போர்க் கடவுளால் இணைக்கப்பட்டவர்களை மனித சமாதானம் பிரிக்கா திருக்கட்டும் ". இந்தக் கடிதம் எழுதிய தினம், அமெரிக்க

ஜனத் தலைவரும் நம் பிரதம மந்திரியும் மூவரசு மகாநாட்டிற்கு சோவியத் பிரதம மந்திரியையும் அழைத்த செய்தியைப் படித்திருப்பீர்கள். முழு வெற்றியை நாம் அடையும் முன் நாம் கடக்க வேண்டிய கட்டங்கள் மிகவும் கஷ்டமானவை. ஆகவே, நம் நாட்டு மக்களைக் கொண்டு எந்தெந்த வழிகளில் உற்பத்தியைப் பெருக்கலாம் என்பது பற்றி ஆலோசிக்கவே இம் மகாநாடு கூட்டப் படுகிறது. யுத்த முரசு கொட்டியவர்கள் தான் வெற்றி முரசும் கொட்டக் கூடியவர்கள்.

—ஜார்ஜ் யங்.

# வாக்குறுதியை மீறும் ஜப்பானியர்.

## தன்னலம் ஒன்றே குறி.

### சயாம் ஏமாந்த சரித்திரம்.

பேராசை கொண்ட அரசியல் வாதிகளுக்கு ஏராள மான இலஞ்சங்கள் கொடுத்து, சயாம் நாட்டைத் தம் வசம் ஒப்புவித்து விடும்படி ஜப்பானியர்கள் தூண்டினார்கள். இதில் வெற்றியும் பெற்றார்கள். எனவே, சயாமுக்கும் ஜப்பானுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி சயாம் ஜப்பானியர் கைக்கு மாறி விட்டது. சயாமுக்கும் இந்தோ சீனாவிற்கும் இருந்த எல்லைத் தகராறுகளில் சயாமுக்குச் சாதக மாக ஜப்பான் இருந்தது. 2 லட்சம் என (ஜப்பான் நாணயம்) வரை பண உதவி புரிவதாக ஜப்பான் சயாமுக்கு வாக்குறுதி கொடுத்தது. "இரு தரத் தாருக்கும்" நன்மை தரத் தக்க முறையில் வியா பார ஒப்பந்தம் செய்து கொள்ளலா மென்றும் ஜப்பானியர்கள் கூறினார்கள். ஜப்பானிய ரோடு இந் தியர்கள் சமரசம் செய்து கொண்டால், மிகுந்த நன்மை இந்தியாவிற்கு ஏற்படும் என்று நினைக்கும் ஒரு சிலர் இந் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் சயாமின் நிலை இப்போது என்ன என்று சற்று சிந் தித்துப் பார்க்கட்டும்.

முன் கூறிய வாக்குறுதிகளெல்லாம் தென் பசி பிக் யுத்தத்தை ஆரம்பிக்கும் முன்பு தான், அதாவது, 1941-ம் ஆண்டு டிசம்பர்மீ 7உக்கு முன்பு தான் கொடுத்தார்கள். ஆனால், ஜப்பானியர்கள் வென்ற நாடு

**மொழிக்குங் கூட ஆபத்து.**

களில், தம் நன்மைகளைக் காப்பாற்றுவதையே லட்சியமாகக் கொண்டார்களே யொழிய, வெல்லப் பட்ட நாடுகளின் நன்மைகளைக் குறித்து அவர்கள் ஒரு சிறிதும் கவலை கொள்ளவே கிடையாது. 20 லட்சம் என் உதவுவதாக ஜப்பான் சயாமுக்குக் கொடுத்த வாக்குறுதி இன்னும் நிறைவேற வில்லை. ஆனால் இதற்குப் பதிலாக 8 லட்சம் டன் அரிசியை சயாமி லிருந்து, கொண்டு போய் விட்டார்கள். இது மட்டுமா? சயாமுக்குச் சொந்தமான எல்லா விமான நிலயங்களையும் கைவசப் படுத்திக் கொண் டார்கள். பாங்காக் ரேடியோ, தமக்கு அடக்கமான தாகவும், தம் சௌகரியம் போல பயன் படுத்திக் கொள்ளக் கூடியதுமாக வைத்துக் கொண்டார்கள். சயாமிய மொழியையுங் கூட கொடுமைக்கு உள் ளாக்கி விட்டார்கள். அதிலிருந்த உயிரெழுத்துக்க ளில் 5-ம், மெய் யெழுத்துக்களில் 13-ம் நீங்க விட வேண்டும் என்று உத்திரவிட்டு விட்டார்கள். 50 லட்சம் தேல்கள் (சயாம் நாணயம்) மதிப்புள்ள பாங்கி நோட்டுகளை ஜப்பான் தலைநகரமான டோக்கி யோவில் அச்சிடப் படும் என்று சென்ற மாதம் டோக்கியோ ரேடியோ ஒரு செய்தியை வெளியிட்டது. அதாவது, என் (ஜப்பான் நாணயம்) மதிப்பை விட பாட் (சயாம் நாணயம்) மதிப்பு மூன்றி லொரு பங்கு குறைந்து விடும். சயாம் பாங்கிகளின் ஆதிக் கம் ஜப்பான் கைக்கு மாறும் முன்பு, 100 பாட் பெறுமான சாமான்களுக்கு 100 என் விலை கொடுத்தார்கள். 100 என் பெறுமான முள்ள ஜப்பான் சாமான்களுக்கு சயாமியர்கள் 64 பாட் தான் கொடுத்தார்கள். அல்லாமலும், ஜப் பானி லிருந்து வந்து சயாமில் இறக்குமதி யாகும் செய் பொருள்களுக்கு இப்போது 100-க்கு 50 பங்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி யிருக்கிறது. ஜப்பானியப் படைகளுக்காக சயாமி லிருந்து அனுப்பப்படும் விளை பொருள்களுக்கு, ஜப்பா னியக் கம்பெனிகளான மித்சுயி மித்சுபூஷி, கம் பெனியார் விதிக்கும் விலையையே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் சயாமிய விவசாயிகள் இருக்கிறார்கள்.

தலை நகரத்தைக் கூட மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது. 'நிச்சி நிச்சி ஷிம்புன்' என்னும் பத்திரிகையில் வெளி வந்திருக்கும் அறிக்கையி லிருந்து, தற்போதுள்ள தலை நகரமான பாங்காக் குக்கு கிழக்கே 110 மைல்கள் தூரத்தி லுள்ள 'குராபுரி' என்னும் இடத்திற்கு சயாம் தலை நக ரத்தை மாற்றி விடும்படி வற்புறுத்தப் படுவதாகத் தெரிகிறது. மஞ்சூரியாவைக் கைப்பற்றிய போதுங் கூட, இது போலவே தான் ஜப்பானியர்கள் செய்தார் கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பழைய சம்பந்தங்களை எல்லாம் அறவே அறுத்து விட வேண்டு மென்பது முதல் காரணம். புதிய தலை நகரத்தில் பூமி விலைகளில் பேரம் செய்ய ஜப்பானிய உத்தியோகஸ்தர்களுக்குச் சந்தர்ப்பங் கொடுக்க வேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

சயாமிய தேசியத்தை வளர்க்கத் தாம் மிகவும் அக்கரை கொண்டு இருப்பதாகப் பாவனை செய்வது தான், சயாமி லுள்ள ஜப்பானியர் கொள்கை. சென்ற மே மாதம் 1?-ம் தேதி பாங்காக் ரேடியோவில் கீழ்க் கண்ட வாறு கூறப்பட்டது :—

**ஜப்பானியர் போலித் தனம்.**

"தாய் (லாந்து) சம்பந்தமான எல்லா வற்றையும் ஆதரியுங்கள். காலையில் எழுந்து இரவில் படுக்கும் வரை தாயைப் பற்றியே சதா நினைத்துக் கொண் டிருங்கள். ரேடியோ உள்பட தாயிலே தயார் செய்தவற்றையே வாங்குங்கள்!"

தாயலாந்தில் தயாராகும் ரேடியோக்கள் மிகவும் மட்ட மானவை. அந்த நாட்டுக்குள் நடை பெறும் நடவடிக்கைகளைத் தான், அவற்றைக் கொண்டு கேட் கக் கூடும். இந்த மாதிரி ரேடியோக்களையே வாங் கும்படி கூறும் ரேடியோ செய்தி, எப்படி அந் நாட் டுக்குப் பயன் தரக் கூடியதா யிருக்கும்?

# நேச தேச விமான வெற்றிகள்

### ஆக்யாப் துறைமுகம் தாக்கப் பட்டது.

ஜப்பானியர் வசப்பட்ட பர்மிய நாடுகளின் மீது நச தேச விமானங்கள் 60 முறை மே மீ தில் மட்டும் படை எடுத்துப் போயிருக்கின்றன.

வங்காளக் குடாக் கடலில் அரிசி ஏராளமாக ஏற்று மதியாகும் துறைமுகம் ஆக்யாப். நம் விமானப் படைகள் இதையே குறியாக ஒரு மாதத்தில் 15 முறைகள் தாக்கின. சென்ற 18 நாட்களுக்குள் ளாக 10 முறை தாக்கின. ஆக்யாபின முக்கியமான துறைமுகம் நாசமாகி விட்டது. அதை யடுத்திருந்த நெல் அரைக்கும் இயந்திரமும், கம்பியில்லாத தந்தி ஆபீசும் நாசமாகி விட்டன.

நமது விமானப் படை யொன்று ஆக்யாபில் பூமி மட்டத்திற்கு 100 அடி உயரத்தில பறந்து வந்து ஆக் யாப் விமான நிலயத்தையும், அதை யடுத்திருந்த சில கட்டிடங்களையும், சில மைல்களுக்கு அப்பால் இருந்த எதிரி முகாமையும் மிஷின் பீரங்கிகளால் நாசம் செய்து விட்டது.

ரங்கூன் துறைமுகத்தைத் தாக்குவதில் அமெரிக்க விமானிகள் மிகவும் புகழ்பெற்று விட்டார்கள். அந்த ஒரு மாதத்தில் 5 முறை அத்துறை முகத் தைத் தாக்கினார்கள். சிந்துவின் ஆற்றில் போய்க் கொண்டிருந்த எதிரி கப்பல்களை நம் விமானப் படை கள் திடீரெனத் தாக்கின. தாம் தாக்கப்படுவதை அவர்கள் உணரு முன்பே, அவர்களுடைய 3 கப்பல் கள் மூழ்கி விட்டன.

# இன்னும் என்ன வேணும்?

ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ மூளைகள் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பிரமாதமாக வேலை செய்து கொண்டு தானிருக்கின்றன. வண்டைக்காயில் வழவழப்பு இருப்பதேன்? முட்டைக்கோஸில் இத்தனை இலைகள் மூடிக் காண்டிருப்பதேன்? மாங்காய்க்கு மூக்கு இருப்பதேன்? ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாததேன்? அதற்குக் கடவுள் ஏன் தக்க கண்ணாடி சப்ளை செய்யவில்லை? என்பது போன்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்வதில், மேற்கண்ட மூளைகள் ஈடுபட்டிருக்க வில்லை. ஆனால், இப்பொழுது இந்த உலகத்தையே அல்லோல கல்லோலப்படுத்திவிட்டிருக்கும் கோர யுத்தத்திற்குச் சீக்கிரமே ஒரு முடிவு காண வேணும் அல்லவா? இதுதானே உங்களுடைய விருப்பம்? ஏன், உலகோர் அனைவரது ஆசையும் அதுவே தான். இந்த ஆசையையும், விருப்பத்தையும் பூர்த்தி செய்வதற்கான சுருக்கு வழி எது என்பதை ஆராய்வதிலேயே மேலே குறிப்பிட்ட மூளைகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. ஒவ்வொரு மூளையும் ஒரு அரிய யோசனையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அம்மாதிரி வெளியான யோசனைகளில் ஒரே நாளில் ஆயிரம் வெடி விமானங்களை ஜெர்மனியில் உள்ள பிரபல தொழிற்சாலை நகரமான கொலோன் மீது குண்டு மழை பெய்துவர அனுப்பினது ஒரு மூளையின் யோசனை தான். அதன் பயனாக, இருநூற்றைம்பது தொழிற்சாலைக் கட்டிடங்கள் பாழாகி விட்டனவாம். பல ரயில் பாதைகள் நாசமாகி விட்டனவாம். அவ்வளவுக் கவ்வளவு ஜெர்மானிய யுத்த யந்திர யமனுக்குக் கிடைக்கும் தீனியில் கொஞ்சம் மண் விழுந்தது போல் தானே?

ஜெர்மனியின் கைவசமுள்ள பெல்ஜியம், ஹாலந்து நார்வே, பிரான்ஸ் இங்கெல்லாம சமயம் பார்த்து போயிறங்கி, சாத்தியமான வரை ஹார்பரையும், போக்கு வரத்து சாதனங்களையும், கடற்கரையோரமாக உள்ள ஆலைகளையும் நாசமாக்கி வரவேண்டும் என்ற யோசனையை எடுத்துக் கூறியது மற்றொரு மூளை. அதன் பலன் ஜெர்மானியருக்கு எந்த நாளும் திகில்தான், எங்கே மறுமுறை வந்து உபத்திரவம் செய்வார்களோ என்று.

'டக்' என்று ஸிரியாவிலும், இரானிலும், மடகாஸ்கரிலும் நமது படைகளைக் கொண்டுபோய் இறக்கி யுத்தம் முடியும் மட்டும் மேற்கண்ட பிரதேசங்களை நமது ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொண்டு, அச்சு நாட்டினர் அங்கு, அயர்ந்த சமயத்தில் காலடி எடுத்து வைக்க விடாது தடுக்க வேண்டும் எனத் திட்டம் போட்டது வேறு சில மூளைகள்.

இம்மாதிரியாகச் சிறுக சிறுகப் பலவிதப் பலன்களை பெறும்படி செய்திருக்கின்றன பல மூளைகளின் வேலைகள். இவற்றில் எல்லாவற்றிலும் சிறந்தது என்று சொல்லும்படியான தோர் வேலையை சென்ற வாரம் ஒரு பெரிய மூளை அற்புதமாகக் செய்து முடித்து, 'சபாஷ்! சபாஷ்! அரக்கனை ஒழிக்க அற்புதமான வழி இது' என்று எல்லோரும் புகழ்ந்து பாடும்படி செய்து விட்டது. அது என்ன வேலை? அதைச் செய்தது யாருடைய மூளை? என்று அறிய ஆசைப்படுவீர்களே!

ருஷ்யாவிலே உள்ள மாலடோவ் என்ற அன்னிய நாட்டு மந்திரியின் மூளை தான் இத்தகையதோர் பெரிய வேலையைச் செய்தது. அவர் பார்த்தார், இப்பொழுது யுத்தம் போய்க் கொண்டிருக்கும் போக்கை. ஜெர்மானிய யமன், நீதி, நியமம், மக்களுடைய உயிர், சாமான்களின் நாசம், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய துன்பம் இதையெல்லாம் லக்ஷியம் செய்யாது, கண்மூடித்தனமாக ருஷ்ய மண்ணில் போராடிக் கொண்டிருப்பதை அவர் பார்த்தார். இந்த யமன், ருஷ்யாவிற்கு வெளி உலகிலிருந்து வரும் உதவியையே ஒரு காலத்தில் உள்ளே வந்து சேராதபடி தடுத்து விட்டாலும் தடுத்து விடுவான் என்ற யோசனை அவருக்கு எழுந்தது. வரு முன் காத்து, வலுப்படுத்திக் கொள்வதே புத்திசாலிகளுக்கு அழகு என்று நினைத்தார்.

'கூட்டிக் கொண்டுவா, நம் ஊர் பத்திரிகைக்காரர்களை யெல்லாம்' என்றார். பத்திரிகைக் காரர்கள் வந்தார்கள். 'மகானுபாவர்களே! ஒரு வேண்டுகோள்! நான் ஒரு முக்கிய காரியமாக சீமை வரை போய் வரப் போகிறேன். நீங்கள் தயவு செய்து, நான் இவ்வூர் திரும்பி வரும்வரை, நான் ஊரை விட்டுப் போயிருப்பதைக் குறித்து ஒரு அக்ஷரம் கூட எழுதாமலிருக்க வேண்டும். உங்கள் திருப் பேனாக்களுக்கு வேறு ஏதாவது திருவேலைகளைக் கொடுத்துக் கொண்டிருங்கள். அதோ நம்முடைய சேனாபதி டிமொஷெங்கோ தென் ருஷ்யாவில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறாரே, அதைப் பற்றி எழுதுங்களேன்! என்னுடைய பயணத்தைப் பற்றி மட்டும், ஆமாம்! மூச்சுக்கூட விடாத உங்கள் திருவாய்களைக் கொஞ்சம் மூடிவைத்துக்கொண்டிருந்தால், ரொம்ப நன்றாயிருக்கும். என்ன, போய்வரட்டுமா? என்று கேட்டார்.

'சரி!' என்ற பதில் கிடைத்து விட்டது. உடனே ஒரு பெரிய விமானத்தில் கிளம்பி விட்டார் லண்டனை நோக்கி. அங்கும் ஏக ரகசியமாக உலாவினார். பிறகு, அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனுக்குப் பறந்து போனார். அங்கு, 'மிஸ்டர் பிரௌன்' என்ற நாமதேயத்தோடு சுற்றி வந்தார். அப்பால் நேரே மாஸ்கோவிற்குத் திரும்பி விட்டார் அவர் ஊர் போய்ச் சேர்ந்ததும், அதுவரை மன நிம்மதியில்லாது, தமது வாக்குகளாலேயே கட்டுப்பட்டுக் கிடந்த பத்திரிகைக்காரர்கள் ஆனந்தத்தோடு அவிழ்த்து விட்டு விட்டார்கள் சேதியை.

'ருஷ்யாவும், பிரிட்டனும் ஒரு கெட்டியான ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. அதேமாதிரி தான் அமெரிக்காவுடனும் ருஷ்யா ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் இருபது வருஷங்களுக்கு அமுலிலிருக்கும். ஒரு வருஷ நோட்டீஸ் கொடுத்தே, இதை நீக்கிக் கொள்ள வேண்டும். எல்லோரும் ஒன்றாகக்கூடி, இந்த ஹிட்லரின் இடுப்பெலும்பை ஒடித்து விட வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தங்களின் நோக்கமாகும். அதோடு, யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவில் அமைதியும் க்ஷேமமும் ஏற்படவும் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் கூறுகின்றன. ஹிட்லர் மற்றும் ஹிட்லர் கையின் கீழ் சிக்கியிருக்கும் ஜெர்மனி—இவை நேசநாட்டினரின் பொது விரோதிகள். இவர்களோடு, யாரும் தனித்தனியாக எத்தகைய உடன்படிக்கையோ, ஒப்பந்தமோ, ராஜியோ கொள்ளவே கூடாது என்பதும் இந்த ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள். இதைப் போன்ற அரிய சம்பவம் இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் நடந்ததேயில்லை' என்று பத்திரிகைக் காரர்கள் தெரிவித்தார்கள்.

இந்தச் சேதி ஹிட்லருடைய மலைக்கோட்டைக்கு எட்டியிருக்காதென்று நினைக்கிறீர்கள்? சீ! ஹிட்லர் அவ்வளவு மோசமா என்ன, தன் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டு, வெளி உலகச் சேதிகளையே கேட்காதிருக்க? மற்றெல்லோரையும் விட, தனது எதிரிகள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதில் அவருக்கே அதிக சிரத்தை இருக்குமல்லவா? ஆகவே, அவரது செய்திகளில், இந்த இரு அற்புத ஒப்பந்தங்களைப் பற்றிய தகவல் விழுந்தவுடன், அப்படியே அவருடைய வயிற்றிலே புளியைக் கரைத்து விட்டது போலிருக்கும் என்பதில் சந்தேகமா என்ன?

'1942-ல் கட்டாயமாக ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து விடுகிறோம்' என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறிவிட்டதும், 'அதை நாங்கள் ஆமோதிக்கிறோம்' என்று பிரிட்டன் தலையை ஆட்டியிருப்பதும், ருஷ்யாவிற்கு ஆயுத உதவி அனுப்பும் வேகத்தை இன்னும் அதிகரிக்கச் செய்யப் போகிறோம் என்று அந்நாடுகள் தெரிவித்திருப்பதும், அமெரிகக வீரர்கள் உலகெங்கும் போய், ஆயுதங்களுடன் இறங்குவதும், ஹிட்லருக்குப் பெருந் திகைப்பை உண்டாக்கத் தான் செய்திருக்கும். தனது காரியம் ஒரு தினுஸாக முடிந்த பிறகோ, அல்லது எக்கச்சக்கமாக எங்காவது மாட்டிக்

கொண்டிருக்கும் பொழுதோ, ருஷ்யாவின் காலிலே ரகசியமாக விழுந்து, சமரசத்திற்கு வழி செய்து கொள்ளலாம் என்று ஹிட்லர் நினைத் திருந்தால, அந்த நினைவிலும், இந்த ஒப்பந்தங்கள் மண்ணைப் போட்டு விட்டிருக்கும்.

தவிர, ஜப்பான் ஏதாவது கொஞ்சம் உதவி செய்யக் கூடும் என்று ஹிட்லர் நினைத்திருந்திருப்பார். ஜப்பான் என்னடா என்றால் பெரிய குள்ள நரியாக இருக்கிறது. தன் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்வதிலேயே அது தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஏமாந் திருப்போர்களை இதமாகப் பேசி நன்றாக ஏமாற்றவும், ஓய்ந் திருப்போரை ஓங்கி அடிக்கவும், திருட்டு வழிகளைக் கண்டு பிடிப்பதில் மும்முரமாக முனைந்திருக்கிறது.

பாருங்களேன் ! யாரோ ஒரு ஜப்பானிய விமானி, அவனது விமானம், வங்க மண்ணில், ஒரு கோடியில் தீப்பற்றி விழுந்திருக்கிறது. அதிலிருந்த விமானி காயம் பட்டுக் கிடந்தான். அவனைத் தைரியமாக ஒரு காவலாளி பிடித்துப் போலீஸில் ஒப்படைத்தான். அந்த விமானி நடு நடுவே மகாத்மா காந்தியின் பெயரையும் உச்சரிக்கிறானாம். அப்படிச் சொன்னால் தப்ப விட்டு விடுவார்கள், நம்மிடம் அநுதாபம் கொண்டு என்ற நினைப்புப் போலிருக்கிறது அவனுக்கு. எல்லாம்வேஷம் ! மோசம் ! கபட நாடகம் ! இதெல்லாம் தானய்யா சொல்லிக் கொடுக்கிறார்கள் அவர்களது பள்ளிக்கூடங்களில். இந்தக் கபட நடிப்புகளைக் கண்டும், வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போன்ற 'நைஸ்' பேச்சைக் கேட்டும், யாரும் ஏமாறக் காணோம். யாரும் ஏமாறக்கூடாது என்றே அதிகாரிகள் வெகு ஜாக்கிரதையாகப் பொது மக்களைப் பல விதங் களிலும் எச்சரித்து வருகிறார்கள். இதையெல்லாம் பற்றிக் கேள்விப்பட்ட ஹிட்லருக்கு, ஒரே தலைவலி மயமாக ஏற்பட்டிருக்கத் தான் செய்யும் !

இது ஆச்சா ? ருஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பலனுள்ளதாக நீடித்திருக்கச் செய்யவும், 1942-ல் ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கிறேன் என்று கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பல சட்டங்களை இயற்றப் போகிறார். கப்பல் கஷ்டம், அது, இது என்று இனிச் சொல்லப் போவதில்லை அவர். எப்படியும் ருஷ்யாவிற்கு உதவி போய்ச் சேரும்படி செய்தே தீருவார் அவர். அமெரிக்க சாமான்களின் உற்பத்தி வேகமோ, அமோகமா யிருக்கிறது. இந்த சாமான்கள் எல்லாம் நேச நாடுகளுக்கு விநியோகமாகி வருவதே ஹிட்லருக்கு கலக்கத்தை உண்டாக்குகிறது.

அதோடு, சீமையி லிருந்து, லிட்டில்டன் என்பவர் அமெரிக்காவிற்குப் போய் பிரிட்டன் சாதிப்பவற்றையெல்லாம் பற்றி பெரிய புராணம் படித்து விட்டார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து தயாரிக்கும் விமானங்களின் எண்ணிக்கை, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் இம்மூன்று நாடுகளும் சேர்ந்து தயாரிக்கும் விமானங்களின் எண்ணிக்கையை விட அரை மடங்கு அதிகம். நேச நாடுகள் எல்லாம் சேர்ந்து தயாரிக்கும் விமானங்கள், அச்சு நாட்டு விமானங்களைப் போல் இரு மடங்கு அதிகம். யுத்தத் தளவாட உற்பத்தியின் சிகரத்தை இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில பிரிட்டன் எட்டி விடும். பிரிட்டனிலே ஐந்து வீட்டுக்கு ஒரு வீடு வீதம் பாழாகி விட்டது. ஆனாலும் பிரிட்டிஷ் மக்களுக்கு உள்ள மனோவலிமை சற்றும் குறைய வில்லை. குறையாதது மட்டுமில்லை ; அவர்களுடைய உத்சாகமோ நாளுக்குநாள் அதிகமாகிவருகிறது. வருடத்திற்கு நாற்பத்தி மூவாயிரம் பீரங்கிகள் என்ன, இரண்டரைக் கோடி தோட்டாக்களென்ன, ஏராளமான விமானங்களும், டாங்கிகளும் என்ன, தயாராகிய வண்ணமாகவே இருக்கின்றன. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் வரும்படியிலே நூற்றுக்கு அறுபது இந்த யுத்தத்திற்காகச் செலவிடப் படுகிறது. முன் வைத்த காலைப் பின் வையோம் என்று ஐரோப்பா மீது படையெடுப்போம் என்றும் லக்ஷக்கணக்கான, அனுதினமும் பயிற்சி பெற்று வரும் வீரர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஆயிரம் வெடி விமானங்களை அனுப்பினோமா, இந்த எண்ணிக்கை எவ்வளவு உயரம் போகிறது பாருங்கள் என்று கூறினர் 'அவர்.' இதைக் கேட்டும் ஹிட்லர் நிம்மதியாக இருந்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

எந்த சமயத்திலும் இனிப் படையெடுத்தே தீருவார்கள் என்ற பீதி அவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது, மேலைக் கடற்கரை யோரங்களில் நடக்கும் தீவிர ஏற்பாடு களிலிருந்து நன்றாகத் தெரிகிறது. பெல்ஜியக் கடற் கரையில் பலமான முஸ்தீப்புகள் நடக்கின்றனவாம், கரையி லிருந்து பத்து மைல் தூரத்திற்கப்பால் வரை, பயங்கரமான பதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறதாம். ருஷ்யாவிற்கு அனுப்பப் பெற்ற படை வீரர்கள் திரும்பவும் பெல்ஜியத்தைப் பாதுகாக்கத் திரும்பி விட்டார்களாம். ஏராளமான பீரங்கிகள், மோட்டார்ப் படைகள், விமானங்கள் எல்லாவற்றையும் இங்கே சேகரித்து வைக்க ஹிட்லர் உத்திர விட்டிருக்கிறாராம். பாரிஸிலே அடிக்கடி தண்டா செய்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரே இறுதி முடிவைக் காட்டச் செய்திருக்கிறார். ஆனாலும் ஜெர்மானியர் என்றால் வேப் பங்காயாகப் பாவிப்போரின் எண்ணிக்கை தான் அதிகரித்து வருகிறதாம்.

சமீபத்தில் ஹீட்ரிச் என்ற நாஸி சூரர் தாக்கப்பட்டு, பின் மரண மடைந்ததும் மேற்கண்ட கோஷ்டியில் உள்ள ஒருவரது செய்கையாகத் தானிருக்கும். அதற்காக ஒரு வீக்கிராமம் முழுவதையுமே தரைமட்டமாக்கி, குழந்தைகள், மாதர், ஆடவர் அனைவரையும் சித்திர வதை செய்தார்களாம். நூற்றுக் கணக்கில் பலரை, பழிக்குப் பழி என்று தூக்கி லிட்டார்களாம்.

இதற்கெல்லாம் இருக்கிறது சரியாகப் பின்னால், யுத்தம் முடிந்ததும். இந்தக் கோரச் செயல்களைப் புரிந்தவர்களை நாமும் சித்திரவதை செய்தே தீருவோம், என்று லண்டனில் உள்ள வீக் தலைவர் டாக்டர் பீனஸ் கூறியிருக்கிறார்.

ருஷ்யாவிலோ எதிர் பார்த்த வேகத்தில் வெற்றிகள் கிடைக்க வில்லை. லிபியாவிலும் சூரர் ரோமெல் சட்டென முன்னேறக் காணோம். அமெரிக்கக் கப்பற் படையோ, பவழக் கடலிலும், நடுவழித் தீவுகள் அருகிலும் அச்சு நாட்டு சகாவான ஜப்பானின் கப்பற் படைக்கும், விமானங்களுக்கும், விமானந் தூக்கிகளுக்கும் படுசேத முண்டாக்கி விட்டது. ஒரு மனுஷனின் மனசைக் குழப்ப, இதை விட இன்னும் என்ன வேணுமய்யா ? யாரானாலும் சரி, தொங்கித் தான் போய் விடுவார்கள் இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையில் என்ற தைரியத்தில் தான், இவ்வருடத்தோடு ஹிட்லரின் தலை விழுந்து விடும் என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது. அவர்கள் வாய் முகூர்த்தமோ, அல்லது உலகின் நல்ல காலமாகவோ, சீக்கிரம் இந்த நாஸி யமனுக்குச் சாவு வந்தால் தேவலை போலிருக்கிறது.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.